இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

## இதழியல் டிப்ளோமா (Diploma in Journalism)
## கற்கைநெறிக்கு பயிலுனர்களை இணைத்துக் கொள்ளல் – 2017 / 2018

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் ஒலுவில் வளாகத்தில் நடாத்தப்படும் இதழியல் கற்கைநெறியினை பயில விரும்பும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவைப்படும் தகைமைகள்** : க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் **அல்லது** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி, கணிதம் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி **அல்லது** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் இதழியல் துறையில் 03 வருடகாலம் அனுபவம்

**கற்கைநெறிக் காலம்** : ஒரு வருடம் (வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் மட்டும் நடை பெறும்)

**கட்டணம்** : ரூபா. 40,000.00 (இவை நான்கு தவணைக் கட்டணங்களில் செலுத்த முடியும்)

**மொழி மூலம்** : தமிழ்

**தெரிவு செய்யப்படும் முறை** : கல்வித்தகைமை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**விண்ணப்ப முடிவுத் திகதி** : **19.09.2018**

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 300.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டு (Paying-In-Voucher - PIV) ஊடாகவே, எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். விண்ணப்பப்படிவங்களையும் பற்றுச் சீட்டினையும் நேரடியாகவும் அல்லது பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk இல் பதிவிறக்கம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினை (PIV – University Copy) கழராதபடி விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டும். அதற்கமைய முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை **19.09.2018** அன்று அல்லது அதற்கு முன்னர் உதவிப்பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இதழியல் டிப்ளோமா - 2017 / 2018" எனக்குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:** 2017 / 2018 ஆம் ஆண்டுக்காக ஏற்கனவே இக்கற்கை நெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

பணிப்பாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
24.08.2018